# நடப்பு நிகழ்வுகள் ஜனவரி 26.01.2018

- உலகில் முதன்முதலாக ஹைட்ரஜன் எரிவாயு உதவியால் இயங்கும் சைக்கிளை பிரான்ஸ் நாடடின் பிராக்மா என்ற நிறுவனம் அறிமுகம் செய்துள்ளது. 21 ஹைட்ரஜனை நிரப்பினால் 100km வரை பயணம் செய்யலாம்.
- தண்ணீர் அற்ற உலகின் முதல் பெரிய நகரமாக மாறிவிடும் என்று அஞ்சப்படும் தென்னாப்பிரிக்க நகரமாக கேப்டவுனில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் தண்ணீர் அளவு குறைக்கப்படவுள்ளது.
- சுனாமி, வெள்ளம் போன்ற பேரிடர்களின் போது மூழ்காமல் இருக்கும் வயைில் புதிய கார் ஒன்றை ஜப்பானைச் சேர்ந்த டொயோட்டா நிறுவனத்தின் முன்னாள் ஊழியர் "சுருமாக்க" வடிவமைத்துள்ளார்.
- 2018 ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இப்போது பிரான்ஸ் நாட்டில் தயாரிப்பில் இருக்கும் உலகின் மிகப் பெரிய உல்லாச பயண கப்பலான சிம்.்.பனி ஆப் தி ஸீஸ் (கடலின் சிம்.்.பனி) தன் முதல் பயணத்தை துவங்க உள்ளது.
- எவரெஸ்ட் சிகரத்தில் ஏறுவதைப் போன்று மிகக் கடினமானது என்று செல்லப்படும். "கேப் ஹார்ன்" கடல் பகுதியை இந்திய மகளிர் கடற்படையினர் வெற்றிகரமான கடந்தனர். சர்வதேச அளவில் "மேக் இன் இந்தியா" திட்டத்தை கொண்டு செல்லவும் பெண்களுக்கு முழு சுதந்திரம் தரவும் அனுமதியளித்தது.
- அரசு வேலைகளில் அனாதைகளுக்கு 1% இட ஒதுக்கீடு வழங்க மகாராஷ்டிரா மாநில அரசு முடிவு செய்துள்ளது.
- ஊட்டசத்து நிறைந்த கம்பு உற்பத்தியை அதிகரிக்க 2018 தேசிய கம்பு ஆண்டாக மத்திய அரசு அறிவித்துள்ளது.
- பாலின சமத்துவம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த தில்லி முதல்வர் அரவிந்த கெஜ்ரிவால் பெண் குழந்தை வாரத்தை தொடங்கினார். ஜனவரி 24 தேசிய பெண் குழந்தை திருமணமாகும்.
- உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) 2018 ம் ஆண்டின் காலண்டரில், இமாச்சலப் பிரதேசத்தின் மண்டி மாவட்டத்தில் உள்ள சப்தோட் கிராமத்தைச் சேர்ந்த சுகாதார அலுவலரான கீதா வெர்மா இடம் பிடித்து, இந்தியாவுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.
- புதிய ரோந்துக் கப்பல் இந்தியக் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைப்பு புதியதாக தயாரிக்கப்பட்டுள்ள அதிநவீன ரோந்துக் கப்பல் "விஜயா இந்தியக் கடலோரக் காவல் படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. சென்னை – எண்ணூர் துறைமுகத்தில் தயாரிக்கப்பட்டது.

- 3 ம் தலைமுறை செயற்கை கோளுடன் விண்ணில் வெற்றிகரமாக சிறிப் பாய்ந்தது. ஜப்பானிய EPSILION 3 ராக்கெட், ஜப்பான் தனது 3 ம் தலைமுறை **செயற்கைக்கோளை** விண்ணில் ஏவி சாதனையடைந்தது.